## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



18-12-2025

**புதுடெல்லி, டிச. 20 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (18.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

### 1. விளையாட்டு உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் 21% பயனபடுத்தாமல் இருப்பது ஏன்?

**திருச்சி சிவா**



விளையாட்டுத்துறையில் உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் 21% பயன்படுத்தாமல் இருப்பது ஏன் என திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

தீனதயாள் உபாத்யாய் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை பாலின வாரியாக வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 2. நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் இணைய அலைவரிசையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா?

**கள்ளக்குறிச்சி மலையரசன்**



நாட்டின் அனைத்து கிராம மக்களுக்கும் போதுமான இணைய அலைவரிசை, மின்சாரம் மற்றும் டிஜிட்டல் சாதனங்களுக்கான வசதிகளை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். பெண்கள், மாணவர்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள்களுக்கு டிஜிட்டல் சேவைகள் முழுமையாகவும் சமமாகவும் கிடைப்பதை உறுதி செய்வதற்காக சிறப்பு முயற்சிகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும் இணைய தொடர்புகள் வழங்கும் திட்டங்களில் எதிர்கொள்ளும் உள்கட்டமைப்பு குறைபாடுகளைக் களைய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 3. பராமரிப்பில்லாத தேசிய நெடுஞ்சாலைகள் - சுங்கச் சாவடிகள் கட்டணத்தை முறையாக பயன்படுத்தாத ஒன்றிய அரசு!

**தருமபுரி அ.மணி**



தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார். சுங்கச் சாவடிகளில் கூட்ட நெரிசலை குறைக்க பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ள நிலையில் ஒன்றிய அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் கடந்த மூன்றாண்டுகளில் தருமபுரி சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்பட்ட தொகை தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும் அதன் விவரங்கள் கேட்டும் அவர் கேள்வி எழுப்பினார்.

### 4. தனியார்துறையை ஊக்குவிக்க பிஎஸ்என்எல் நிறுவனத்தை நஷ்டத்தில் தள்ளுகிறதா ஒன்றிய அரசு?

**ஆர். கிரிராஜன்**



நாட்டில் உள்ள மொத்த தொலைத்தொடர்பு கோபுரங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை பிஎஸ்என்எல் நிறுவனத்திடம் உள்ளன, இருந்தபோதிலும் பிஎஸ்என்எல் இணைப்புகள் மற்ற தனியார் நிறுவனங்களைவிடவும் குறைவாக இருப்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பினார். பிஎஸ்என்எல் நிறுவனம் தனது மொபைல் சந்தாதாரர் தளத்தையும் வைஃபை இணைப்புகளையும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதா என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. பெருநகரங்களை நரகமாக்கும் காற்று மாசு - அலட்சியமாக கையாளும் ஒன்றிய அரசு!

**ராஜாத்தி சல்மா கண்டனம்**



2019-ல் தொடங்கப்பட்ட தேசிய தூய்மைக் காற்றுத் திட்டத்தின் (NCAP) செயல்பாடுகளை அளவிட நடத்தப்பட்ட ஆய்வுகள் குறித்து திமுக எம்.பி. ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பினார். இலக்கு எட்டப்படாத 131 நகரங்களில் PM10 அளவை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? டெல்லி உட்பட முக்கிய பெருநகரப் பகுதிகளில் அதிக காற்று மாசுவிற்கான காரணங்கள் யாவை மற்றும் NCAP திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 6. குவாண்டம் தொடர்பு வலையமைப்புகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



இந்திய இராணுவத்துடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் தற்போதுள்ள ஆப்டிக் பைபர் உள்கட்டமைப்பைப் பயன்படுத்துதல் உட்பட நீண்ட தூர குவாண்டம் தொடர்பு வலையமைப்புகளின் மேம்பாடு மற்றும் செயல்பாட்டுகளை ஊக்குவிக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என திமுக எம்.பி. எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். தேசிய குவாண்டம் இயக்கத்தின் முன்னேற்றங்களைப் பயன்படுத்தி, நாடு முழுவதும் உள்ள குவாண்டம் திறவு விசை விநியோக உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன? தேசிய குவாண்டம் இயக்கத்தை ஊக்குவிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நிதி ஒதுக்கீடுகள் குறித்த விவரங்கள் மற்றும் இந்த குவாண்டம்தொடர்புமுன்னேற்றங்களால் தேசிய டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப இறையாண்மையின் மீதான எதிர்பார்க்கப்படும் தாக்கம் என்ன? எனும் கேள்விகளையும் அவர் கேட்டுள்ளார்.

### 7. கேலோ பாரத் கொள்கை 2025- தமிழ்நாட்டில் செயல்படுத்துவது எப்போது?

**எஸ். கல்யாணசுந்தரம்**



புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கேலோ பாரத் கொள்கை 2025, மாநிலங்கள் முழுவதும் திறமையாளர்களைக் கண்டறிதல் மற்றும் பயிற்சி அளித்தல் உட்பட விளையாட்டு மேம்பாட்டை எவ்வாறு வலுப்படுத்தும் என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி எழுப்பினார். இத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள உள்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் விளையாட்டு அறிவியலை ஊக்குவிக்கும் செயல்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் என்ன? இக்கொள்கையின் செயலாக்க வரைபடத்தின் கீழ், சிறப்பு மையங்கள், கிராமப்புற விளையாட்டு மையங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை தம்ழிநாட்டில் உருவாக்குவது எப்போது? இளைஞர்கள் மற்றும் உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குச் சிறந்த நிதி ஒதுக்கீடு, கண்காணிப்பு மற்றும் விளைவுகளை உறுதி செய்வதற்காக, கேலோ இந்தியா திட்டங்களை கேலோ பாரத் கொள்கை 2025 உடன் ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்று அவர் கேட்டுள்ளார்.

### 8. கிராமங்களில் குடிநீர் பற்றாக் குறையை தீர்க்குமா ஒன்றிய அரசின் திட்டம்?

**காஞ்சிபுரம் ஜி. செல்வம்**



தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கம் (ஜேஜேஎம்) - ஹர் கர் ஜல் திட்டத்தின் கீழ் வீட்டுக்குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட மொத்த கிராமப்புறக் குடும்பங்களின் எண்ணிக்கை விவரங்கள் கேட்டு திமுக மக்களவை உறுப்பினர் ஜி. செல்வம் கேள்வி எழுப்பினார். இந்தத் திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள பணிகள் என்ன மற்றும் அவற்றை நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு என்ன? தமிழ்நாட்டில் 'ஹர் கர் ஜல்' எனச் சான்றளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு? மேலும் உள்ளூர் நீர் அமைப்புகளை நிலையான முறையில் நிர்வகிக்கவும் பராமரிக்கவும் கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் அளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் நீர் விநியோகத்தின் தரம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிசெய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, மணம்பூண்டி ஒன்றியம், வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். டி.என்.முருகன், ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, தனலட்சுமி உமேஷ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஒன்றிய அரசின் 'Make in India' வெறும் நாடகம்

# விமானப் பராமரிப்புக்கு தொடர்ந்து வெளிநாட்டைச் சார்ந்திருக்கும் அவலம்!

## மக்களவையில் – கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, டிச.20-*

விமானப் பராமரிப்பு பணிகளை சொந்த நாட்டில் மேற்கொள்ளாமல் ஏன் இன்றும் வெளிநாடுகளைச் சார்ந்திருக்கிறோம் என்று, விமானப் போக்குவரத்து துறையிடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், உள்நாட்டில் இருக்கும் விமான பராமரிப்பு மையங்களை (Domestic MROs) மேம்படுத்த என்ன திட்டம் இருக்கிறது, அதற்கான கெடு நிர்ணயித்து வேலைகள் நடக்கிறதா என்று நேரடியாக கேட்டிருந்தேன்.



இதற்கு ஒன்றிய அரசின் தரப்பில் இருந்து, தன்னுடைய இயலாமையையும், மெத்தனத்தையும் மறைக்கும் சமாளிப்பு பதில்களே வந்துள்ளன.

**Make in India அல்ல, Market in India - ஒன்றிய அரசின் நாடகம்!**

'மேக் இன் இந்தியா மூலம் இந்தியாவை அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவோம்' என்று பத்தாண்டுகளுக்கு மேலாக விளம்பரப்படுத்தி கூவி வருகிறது, ஒன்றிய அரசு. ஆனால், மிக முக்கியமான விமானப் போக்குவரத்து துறையில், 85% பராமரிப்பு பணிகள் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகிறது (நாடாளுமன்றக் குழு அறிக்கை). இதன் நேரடியான அர்த்தம், வெளிநாட்டு விமான நிறுவனங்களுக்கான வியாபாரச் சந்தையாக மட்டுமே இந்தியா செயல்படுகிறது.

இது தன்னிறைவு அல்ல. மாறாக, "இந்தியாவை நீங்கள் உங்கள் வியாபாரப் பெருக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று வெளிநாட்டினருக்கு ஒன்றிய அரசு எழுதிக்கொடுத்த ஒப்படைப்புப் பட்டயம். இந்தியாவை, இந்த அரசு பத்தே ஆண்டுகளில் வெளிநாடுகளின் வியாபாரக் களமாக மாற்றியிருக்கிறது.

**ஒன்றிய அரசு கோட்டை விட்ட அரிய வாய்ப்பு:**

விமானப் பராமரிப்பு பணிகளை வெளிநாடுகளுக்கு தாரைவார்ப்பதால், ஆண்டுக்கு 1.25 லட்சம் கோடி ரூபாய் வரை நமக்கு இழப்பு ஏற்படுகிறது. இதை விமானப்போக்குவரத்து அமைச்சர் சமீபத்தில் சொல்லிய "MRO பணிகளை இந்தியாவில் மேற்கொண்டால், 15 பில்லியன் டாலர் அந்நிய செலாவணியை சேமிக்கலாம்" என்ற கூற்றில் இருந்து நாம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

இந்த இழப்புடன் சேர்த்து, நம்முடைய மிகப் பெரிய மனிதவளத்தைக் கொண்டு, விமானங்களுக்கான ஆசியக்கண்டத்தின் தலையாய MRO Hubஆக மாறும் வாய்ப்பும் நம்மிடம் இருந்து பறிபோய் இருக்கிறது. தற்போது இலங்கை, சிங்கப்பூர், மலேசிய போன்ற சிறிய நாடுகளுக்கும் விமானங்களை MRO க்காக அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

இது பேரவலம். இதைப் பற்றிய சிறு குற்றவுணர்வும் ஒன்றிய அரசிடம் இல்லை.

**இந்தியாவின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கிய ஒன்றிய அரசு!**

விமானப் பராமரிப்புக்கு வெளிநாடுகளைச் சார்ந்திருந்து, நம் தேசப்பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியிருக்கிறது ஒன்றிய அரசு. நமது விமானங்களின் தொழில்நுட்பத் தரவுகள், நம் பயணிகளின் ரகசிய விவரங்கள், நமது வான் வழிப் போக்குவரத்து நடைமுறைகள் ஆகிய அனைத்தும் அந்நிய சக்திகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இது எவ்வளவு தீவிரமானது என்றால், இப்போது இந்திய விமானங்களுக்கு பராமரிப்புப் பணிகளைச் செய்யும் பல தென் கிழக்கு ஆசிய நாடுகள் சீனாவின் Belt and Road Initiative (BRI) திட்டத்தில் அங்கம் வகிப்பவை. இது அறிந்தும் ஒன்றிய அரசு உள்நாட்டு MRO கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அலட்சியம் காட்டுகிறது என்றால், அது இந்தியாவின் பாதுகாப்பை பணயம் வைக்கும் துரோகச் செயலே.

விமான உதிரிபாகங்களின் ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு பைலட்களுக்கான விசா எளிமையாக்கப்பட்டிருக்கிறது என்று ஒன்றிய அரசு சொல்வதெல்லாம் கண்துடைப்பு நடவடிக்கைகள் மட்டுமே.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில்

# 'பாரத் நெட்டின்' கீழ் மேற்கொண்ட திட்டங்கள் யாவை?

## மக்களவையில் –சி.என்.அண்ணாதுரை கேள்வி!



*புதுடெல்லி, டிச. 20-*

பாரத் நெட்டின் கீழ் தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ள இணைப்புத் திட்டங்கள் குறித்து மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

தேசிய பிராட்பேண்ட் மிஷன் (NBM) இன் கீழ், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் பிராட்பேண்ட் இணைப்பை மேம்படுத்தவும் டிஜிட்டல் பிளவைக் குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா;

(ஆ) அப்படியானால், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பாரத் நெட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிராட்பேண்ட் மற்றும் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் (OFC) இணைப்புத் திட்டங்களின் விவரங்கள்;

(இ) தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு விரிவாக்கத்துடன், திறமையான வழித்தட அனுமதிகள் (ROW) மற்றும் பிராட்பேண்ட் திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, கதி சக்தி சஞ்சார் போர்டல் மற்றும் தொலைத்தொடர்பு (வழித்தட உரிமை) விதிகள், 2024 ஆகியவற்றை ஒருங்கிணைக்க அரசு முன்மொழிகிறதா; மற்றும்

(ஈ) பாரத்நெட் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளையும் முழுமையாக சேவைக்குத் தயாராக மாற்ற அரசாங்கம் எந்த நேரத்தில் திட்டமிட்டுள்ளது?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார். அதற்கு தகவல் தொடர்பு இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

## அரிசி, பருப்பு கொள்முதலில்

# தமிழ்நாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை என்ன?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 20–

நாட்டில் வலுவூட்டப்பட்ட அரிசி, பருப்பு வகைகள், பயறு மற்றும் பட்டாணி ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்கள்/கூட்டமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறதா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:–

நாடு முழுவதும் உள்ள பல்வேறு வகையான ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத்திற்காக, வலுவூட்டப்பட்ட அரிசி, பருப்பு வகைகள், பயறு மற்றும் பட்டாணி ஆகியவற்றை ஒன்றிய அரசு கூட்டுறவு சங்கங்கள்/கூட்டமைப்புகள் மூலம் கொள்முதல் செய்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கங்கள்/ கூட்டமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட வலுவூட்டப்பட்ட அரிசி, பருப்பு வகைகள், பயறு மற்றும் பட்டாணி ஆகியவற்றின் அளவு மற்றும் ஒரு கிலோவிற்கான விலை (இந்திய ரூபாய் மதிப்பில்), மாநிலம்/யூனியன் பிரதேசம் வாரியாக தருக?

கடந்த ஐந்து ஆண்டுகளில் தேசிய கூட்டுறவு சங்கங்கள்/கூட்டமைப்பு களால் இதற்காக ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்த நிதி மற்றும் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் குறித்து ஒன்றிய அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா? அப்படியானால், அது தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன, அதன் விவரங்கள் என்ன?



அதற்கு ஒன்றிய அரசின் கூட்டுறவுத் துறை மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா எழுத்து பூர்வமாக கூறிய பதில் விவரம் வருமாறு:–

அரிசி, பருப்பு வகைகள், பயறு மற்றும் பட்டாணி உள்ளிட்ட வலுவூட்டப்பட்ட உணவு தானியங்கள், தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட் (NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு லிமிடெட் (NCCF) போன்ற கூட்டுறவு சங்கங்கள்/கூட்டமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்படுவதில்லை. இருப்பினும், நெல் மற்றும் பதப்படுத்தப்படாத பருப்பு வகைகள் அவற்றின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இந்திய ஒன்றிய அரசு இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் B12 ஆகியவற்றைக் கொண்டு அரிசியை வலுவூட்டும் ஒரு மத்திய அரசின் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பொது விநியோகத் திட்டம், ICDS, PMPOSHAN, PMGKAY போன்ற பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் வலுவூட்டப்பட்ட அரிசியை விநியோகிப்பதன் மூலம், சமூகத்தின் சத்து பற்றாக்குறை / பாதிக்கப்படக்கூடிய பிரிவினரிடையே உள்ள நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) மற்றும் பிற நலத்திட்டங்கள் உட்பட அரசாங்கத்தின் அனைத்துத் திட்டங்களின் கீழும் வலுவூட்டப்பட்ட அரிசியின் உலகளாவிய விநியோகத்தை ஜூலை 2024 முதல் டிசம்பர் 2028 வரை தொடர இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

NAFED மற்றும் NCCF மூலம் அரிசி, பருப்பு வகைகள், பயறு மற்றும் பட்டாணி உள்ளிட்ட எந்த வலுவூட்டப்பட்ட உணவு தானியங்களும் கொள்முதல் செய்யப்படாததால், இது பொருந்தாது.

தொடக்க கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது. பல மாநில கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் உட்பட அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் பொதுவான ஒரு கோரிக்கை, கூட்டுறவுப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு ஜி.எஸ்.டி. விலக்கு அளிப்பதாகும். இது தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

சமீபத்திய ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்களின் கீழ், பால் மற்றும் பன்னீருக்கான வரி விகிதம் பூஜ்ஜியமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயம், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி, பால் கேன்கள் போன்றவற்றின் மீதான ஜி.எஸ்.டி. 12%லிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ஜாம், ஜெல்லி, பழக்கூழ், பழச்சாறு அடிப்படையிலான பானங்கள், சாக்லேட்டுகள், கார்ன்ஃப்ளேக்ஸ், ஐஸ்கிரீம்கள், பேஸ்ட்ரிகள், கேக்குகள் மற்றும் பிஸ்கட்டுகள் உள்ளிட்ட பரந்த அளவிலான உணவுப் பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி. 12%/18%லிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

விவசாயத் துறையில், அம்மோனியா, சல்பூரிக் அமிலம் மற்றும் நைட்ரிக் அமிலம் போன்ற முக்கிய உர உள்ளீடுகள் மீதும், பல்வேறு உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் மீதும் விதிக்கப்பட்ட ஜி.எஸ்.டி. 5%ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், 1800 சிசிக்கு குறைவான டிராக்டர்கள் மற்றும் டயர்கள், டியூப்கள் மற்றும் ஹைட்ராலிக் பம்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய டிராக்டர் உதிரிபாகங்கள் மீதான ஜி.எஸ்.டி. 5%ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கான ஒட்டு மொத்த உள்ளீட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.


மேற்கூறிய குறைக்கப்பட்ட ஜிஎஸ்டி விகிதங்கள், கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகளைப் போட்டித் தன்மை மிக்கதாக மாற்றி, அவற்றின் வருவாயை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**தேவதானப்பட்டி தே.க. இராஜேந்திரன்**

**டிசம்பர் 20 (1996)**



கழகம் தொடங்கிய காலம் முதல் உறுப்பினராகி, நாடகத்தின் மூலம் கழகக் கொள்கைகளைப் பரப்பி, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி கிளைச் செயலாளராகவும் – பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தேவதானப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**